# Prime Minister participates at the online Summit of NAM Contact Group

May 04, 2020

## NAM தொடர்புக் குழுவின் ஆன்லைன் உச்சி மாநாட்டில் பிரதம மந்திரி பங்கேற்கிறார்

மே 04,2020

பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடி தற்போது நடைபெற்றுவரும் Covid-19 தொற்று நெருக்கடிக்கு பதிலளிப்பது குறித்து விவாதிக்க 2020 மே 4 மாலை நடைபெற்ற அணிசேரா இயக்கத்தின் (NAM) தொடர்பு குழுவின் ஆன்லைன் உச்சி மாநாட்டில் பங்கேற்றார்.

இந்த ஆன்லைன் NAM தொடர்புக் குழுவின் உச்சி மாநாட்டு கருப்பொருள் "Covid-19 க்கு எதிராக ஒருமித்த" தற்போதைய NAMஇன் தலைவர், அஜர்பைஜான் குடியரசின் தலைவர் அவரது மேன்மை இல்ஹாம் அலியேவ் தொகுத்து வழங்கினார். Covid-19 தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் சர்வதேச ஒற்றுமையை ஊக்குவிப்பதும், தொற்றுநோய்க்கு தீர்வுகாண மாநிலங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளின் முயற்சிகளை அணிதிரட்டுவதும் உச்சி மாநாட்டின் நோக்கம். இந்நிகழ்ச்சி சர்வதேச பன்முகத்தன்மை மற்றும் சமாதானத்திற்கான இராஜதந்திர தினத்தையும் நினைவுகூர்ந்தது.

பிரதமர் மோடியின் பங்கேற்பு, அதன் முன்னணி நிறுவன உறுப்பினர்களில் ஒருவராக NAM இன் கொள்கைகள் மற்றும் மதிப்புக்கள் குறித்த இந்தியாவின் நீண்ட கால உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. பிரதம மந்திரி தனது தலையீட்டில், இந்த நெருக்கடிக்கு உலகம் ஒரு ஒருங்கிணைந்த, உள்ளடக்கிய மற்றும் சமமான பதிலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் இந்தியா எடுத்துள்ள நடவடிக்கைகளை கோடிட்டுக் காட்டியது, அதே நேரத்தில் இயக்கத்துடன் ஒற்றுமையுடன் உதவிகள் வழங்க இந்தியாவின் தயார் நிலையை கூடிய மட்டும் வழங்குவதை உறுதிப்படுத்தியது. மற்ற வைரஸ்களுக்கு எதிராக,குறிப்பாக பயங்கரவாதம் மற்றும் போலி செய்திகளுக்கு எதிராக உலகம் தொடரும் முயற்சியின் முக்கியத்துவத்தையும் பிரதமர் வலியுறுத்தினார்.

ஆசியா,ஆப்ரிக்கா,லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் மற்றும் ஐரோப்பாவில் உள்ள உறுப்புநாடுகளைச் சேர்ந்த 30 க்கும் மேற்பட்ட மாநிலத் தலைவர்கள் மற்றும் அரசாங்கத் தலைவர்கள் மற்றும் பிற தலைவர்களும் பிரதமர் மோடியுடன் இணைந்தனர். ஐ.நா. பொது சட்டசபை பேராசிரியர்.

டிஜானி முஹம்மது பாண்டே,ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குவெட்ரெஸ் ,ஆப்ரிக்க யூனியன் தலைவர் மூசா பக்கி மகம்மத்,ஐரோப்பிய யூனியன் மேலதிக பிரதிநிதி, ஜோசப் போரெல், அதைப்போலவே உலக சுகாதார நிறுவனத்தின் டைரக்டர் ஜெனரல் டாக்டர்.டேட்ரோஸ் கேப்ரிஎசஸ் போன்றவர்களும் உச்சி மாநாட்டில் உரையாற்றினர்.

ஒட்டுமொத்தமாக, NAM தலைவர்கள் Covid-19 இன் தாக்கத்தை மதிப்பிட்டனர், சாத்தியமான தீர்வுகளுக்கான தேவைகள் மற்றும் தேவைகள் அடையாளம் காணப்பட்டன மற்றும் நடவடிக்கை சார்ந்த பின்தொடர்தல் நடவடிக்கைகளை வலியுறுத்தினர்.உச்சி மாநாட்டை தொடர்ந்து, தலைவர்கள் Covid-19 க்கு எதிரான போராட்டத்தில் சர்வதேச ஒற்றுமையின் முக்கியத்துவத்தை அடிக்கோட்டிட்டுக் கொண்ட ஒரு பிரகடனத்தை ஏற்றுக் கொண்டனர். Covid-19 க்கு எதிரான போராட்டத்தில் அவர்களின் அடிப்படை மருத்துவ, சமூக மற்றும் மனிதாபிமான தேவைகளைப் பிரதிபலிக்கும் ஒரு பொதுவான தரவுத்தளத்தை நிறுவுவதன் மூலம் உறுப்பு நாடுகளின் தேவைகளையும் அடையாளம் காண ஒரு 'பணிக்குழு' உருவாக்குவதையும் தலைவர்கள் அறிவித்தனர்.

**நியூ டெல்லி**
**மே 4, 2020**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.